பகுத்தறிவு போற்றுவோம்! குறள்நெறி காப்போம்!

மராத்திய மாநில
# தமிழ் எழுத்தாளர் மன்றம்

25, திருப்பதி அடுக்ககம். லாலா தேவிதயாள் குறுக்குச் சாலை, முலுண்ட் (மே), மும்பை 400 080
பேச: 022-2593 2903 மின்னஞ்சல்: mahatwa2000@yahoo.co.in

MAHATWA

Reg No:
MAH.ST.527/2003

## Maharashtra Tamil Writers' Association

25, Tirupati Apartments, Lala Devidayal Cross Road, Mulund (W), Mumbai-400 080.
Ph: 2593 2903. email: mahatwa2000@yahoo.co.in, mahatwa2000@gmail.com

29. 09. 09

## பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு - பொற்கிழி விருது

### தமிழ் எழுத்தாளர்களுக்கு வேண்டுகோள்

எழுத்துலக உறவுகளுக்கு வணக்கம்.

பகுத்தறிவையும் குறள்நெறியையும் மக்களிடம் எடுத்துச் செல்லும் எழுத்துகளை ஊக்கப்படுத்தும் பணியைத் தலையாயப் பணியாகக் கருதி, கடந்த ஒன்பது ஆண்டுகளாக மும்பையில் அரும்பணியாற்றி வரும் அமைப்பு மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்றம்.

எழுத்தாயுதத்தின் கூர்மையையும், வலிமையையும் உலகுக்கு உணர்த்திய பகுத்தறிவு எழுத்தாளர் பேரறிஞர் அண்ணா.

அண்ணாவுக்கு தமிழ் எழுத்துலகம் செலுத்தும் நன்றிக் கடனாக, இம்மன்றம் அண்ணாவின் நூற்றாண்டு விழா நிகழ்வுகளை கடந்த ஓராண்டு காலமாக மும்பையின் வெவ்வேறு பகுதிகளில் தொடர்ந்து நடத்தி வருகிறது

வரும் டிசம்பர் திங்கள் 20ம் நாள், மன்றத்தின் சார்பாக **இனமானத் தமிழர், பேராசிரியர் சுப. வீரபாண்டியன்** தலைமையில் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா நடைபெறவுள்ளது. இவ்விழாவில் அறிஞர் அண்ணா பற்றிய சிறந்த நூலுக்கு பொற்கிழி விருது வழங்கப்படவுள்ளது.

2005ம் ஆண்டு முதல் வெளிவந்துள்ள தனிநபரால் எழுதப்பட்ட அல்லது பலரது படைப்புகளைக் கொண்டு தொகுக்கப்பட்ட அண்ணா பற்றிய நூல்கள் மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு பொற்கிழி விருதுக்காக வரவேற்கப்படுகின்றன. தயாரிப்பில் இருக்கும் நூல்களின் கையெழுத்துப் பிரதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும். படைப்புகள் கட்டுரை வடிவிலோ, கவிதை வடிவிலோ இருக்கலாம். ஒவ்வொரு படைப்பிலும் 3 பிரதிகளை, 2009, நவம்பர் திங்கள் 20ம் நாளுக்குள், பொறுப்பாளர் கவிஞர் புதியமாதவிக்கு கீழ்க்கண்ட முகவரியில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். தேர்வுக்கு வரும் நூல்களை திருப்பி அனுப்ப இயலாது என்பதையும் தேர்வுக்குழுவின் தீர்ப்பே இறுதியானது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள தமிழ் எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் அனைவரும் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு பொற்கிழி விருதுக்காக அண்ணா பற்றிய தங்களின் படைப்புகளை அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். நன்றி, வணக்கம்

தங்களின் அன்பையும் நட்பையும் விரும்பும்

**கவிஞர் புதியமாதவி**
பொறுப்பாளர்(09969647854)

**கவிஞர் தமிழ்நேசன்**
ஒருங்கிணைப்பாளர் (09321470312)

**சமீரா மீரான்**
தலைவர், மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்றம்
Maharashtra Tamil Writers' Association
25, Tirupati Apartments, Lala Devidayal Cross Road,
Mulund (W), Mumbai-400 080.
Ph: 022-2593 2903, 09820461598,
email:mahatwa2000@yahoo.co.in,mahatwa2000@gmail.com